B-FIT GYM
Ladies,Gents,Children
Fitness Centre
Weight Reduction, Height gaining, Weight gaining, Body shape, Inches loss, Body fitness
HAMEEDIA SHOPPING MALL
Ind Floor, No.108,109, Triplicane High Road,Chennai - 600005.
Ph : 044-42663307
Cell : 98417 07251

Triplicane News R.Dis.No. 1506/2004 TNTAM/2005/17705 TRIPLICANE, CHEPAUK, MYLAPORE,ROYAPETTAH

# TRIPLICANE NEWS

## டிரிப்ளிகேன் நியூஸ்

மலர் - 5 இதழ் - 19 01 - 10 - 2009 (01-16) (மாதமிருமுறை) பல்சுவை இதழ்
நிறுவனர் ஆசிரியர் : A. பாக்யராஜ், இணை ஆசிரியர் : S. சஜீவகுமார்

பரத் சங்கித் நிகேதன்
இசை நாட்டியப் பள்ளி
73, டி.பி.கோயில் தெரு, முதல் சந்து, சென்னை-600 005.
போன் : 4356 8169, 2848 0931,
செல் : 99411 24431
வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், மிருதங்கம், தபலா, டிரம்ஸ், கீபோர்டு, வயலின், கிடார் ஆகியவை கற்றுத் தரப்படும்

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் குளத்தில் தூர்வாரும் பணி மும்முரமாக நடந்து வருகிறது

இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில் குளங்களைச் சுற்றிலும் கான்கிரீட் சாலை அமைப்பது, குளத்தை சுற்றிலும் தெருவிளக்குகள் அமைப்பது, மழைநீர் கால்வாய்கள் அமைப்பது ஆகிய பணிகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் குளத்தில் தூர்வாரும் பணியை இந்துசமய அறநிலையத்துறை செய்து வருகிறது. குளத்தில் தூர்வாரும் பணியை மேயர் மா. சுப்பிரமணியன் பார்வையிட்டார். இந்த குளத்தில் அகற்றப்பட்ட சகதிகளை மாநகராட்சி லாரிகள் மூலம் சுமார் 50 நடைகள் மூலம் வெளியில் கொண்டு செல்லப்படுகிறது. இந்த பணியில் மாநகராட்சி ஊழியர்கள் 150 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

திருவல்லிக்கேணியில் உள்ள சைமா என்ற சமூக தொண்டு அமைப்பினர் கோயில் நிர்வாக மேற்பார்வையில் குளத்தில் உள்ள சகதிகளை அகற்றும் பணியை மேற்கொண்டனர் என்று பார்த்தசாரதி கோயில் நிர்வாக அதிகாரி ஜெயராமன் தெரிவித்தார்.


இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையர் ராஜேஷ்லக்கானி, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் எஸ்.சுரேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர் காமராஜ், கவுன்சிலர்கள் பி.என். வனஜா, எம்.கல்பனா, சேரன், ஆர்.துரை ஆகியோர் உடன் இருந்தனர்.




டிரிப்ளிகேன் நியூஸ் இதழை இனி வெப்சைட்டில் காணுங்கள்
www.triplicanenews.weebly.com




CHENNAI FASHION
Ladies Tailoring & Designing,
Cosmetics, Burkha,Fancy Jewellery
# 116, Jani Jahn Khan Road,
Royapettah, Chennai - 14
9884141685, 9962112545

ஏ.ஏ.எலக்ட்ரிகல் சர்வீஸ் சென்டர்
A.A.ELECTRICAL & SERVICE CENTRE
- வீடு மற்றும் வியாபார ஸ்தலங்கள் அனைத்திற்கும் ஒயரிங் செய்து தரப்படும்
சிறிய வேலைகளாக இருந்தாலும் செய்து தரப்படும்
- அனைத்து வகையான எலக்ட்ரிக்கல் பொருட்களும் சர்வீஸ் செய்து தரப்படும்
வீட்டிற்குத் தேவையான அனைத்து எலட்ரிக்கல் பொருட்களும் கிடைக்கும்
ஏ.அத்திக், உரிமையாளர்
5/3, ஜெனரல்சாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
போன் : (Off) 044-39165858, 9884326678,
(Res) 93807 79072, Credit card Accept


Md.Kasim

SANTHI MEDICALS
MEDICAL & GENERAL
No.98, (New No.225), Pycrofts Road,
Royapettah, Chennai - 600014.
Cell : 9884220116, Ph : 28482307
FREE HOME DELIVERY

Good Luck Travel Links
A.O. Mohamed Sharbudeen
Mobile : 94440 81851
Email : goodlucktravellinks@yahoo.com
www.goodlucktravellinks.com
Good Luck — A Symbol of Hospitality
Landline : 91 44 28447682
91 44 4356 7869
Tele Fax : 91 44 28447869
Cabs (A/c & Non A/c Vehicles) Package Tours, Tickets (Bus, Train, Air), Hotel Reservations, Visa, Noc.Mobile Recharge & Accessories, Easy Bill Ltd., (Authorised Bill Collection Center)

# 7/4, Venkatachalam Chetty Street, Triplicane, Chennai - 600005


## மதுரை

உலகிலேயே அதிக அளவு சிற்பங்கள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் தான் உண்டு. வருஷத்தின் 365 நாட்களில் 294 நாட்கள் திருவிழா நடக்கும் ஒரே கோவிலும் இது தான். ஆனால் மீனாட்சிக்கு மட்டும் அபிஷேகம் செய்யப்படுவதில்லை.

பிரம்மாண்டமான 1008 விளக்குகள் உள்ள திருவாச்சி இங்குதான் உள்ளது. ஒரே நேரத்தில் 108 விளக்குகள் ஏற்றப்படுவதும் இங்குதான்.

மீனாட்சி அம்மன் கோவிலில் பொற்றாமரைக் குளத்தில் ஒரு கொக்கு மீன்களை உண்ணாமல் சிவபெருமானை நோக்கித் தவமிருந்தது. இறைவன் கொக்குக்கு மோட்சம் அளித்தார். அன்று முதல் அந்தக் குளத்தில் எந்த ஜீவராசிக்கும் இடமில்லை என்று ஈசன் விதித்ததாக ஐதீகம்.

இன்றைக்கும் பொற்றாமரைக் குளத்தில் மீன், தவளை போன்ற எந்த உயிரினமும் இல்லை என்பது ஆச்சரியமே.

# நலம் தரும் குத்துவிளக்கு

'குத்து விளக்கு' தெய்வீகமானது. தெய்வ அம்சம் பொருந்தியது. இதன் அடிப்பாகம் பிரம்ம அம்சம் என்றும், நீண்ட நடுப்பகுதி மகாவிஷ்ணு அம்சம், மேற்பகுதி சிவ அம்சம் எனவும் கூறப்படுகிறது.

விளக்கில் ஊற்றும் நெய் - நாதம், திரி - பிந்து, சுடர் - கலை மகள், தீ - மலை மகள் இப்படி அனைத்தும் சேர்ந்ததே குத்து விளக்கு என்பர்.

இந்த விளக்கை நன்கு மஞ்சள் தடவி, குங்குமமிட்டு, பூச்சுற்றி அலங்காரம் செய்ய வேண்டும்.

பஞ்சுத் திரிதான் விளக்கேற்ற மிகவும் உகந்தது. மெல்லிய திரிகளாகத் திரித்து வைத்துக் கொள்ள வேண்டும். திரிக்கும்போது ஒரு பக்கம் மட்டுமே உருட்ட வேண்டும்.

குத்துவிளக்கில் ஐந்து முகங்களையும் திரியிட்டு ஏற்றித் தொழுவது நலம்தரும். முதலில் எண்ணெய் அல்லது நெய் ஊற்றிய பிறகு தான் திரியிட்டு ஏற்ற வேண்டும்.

ஞாயிறு, திங்கள், வியாழன், சனி ஆகிய நாள்களில் மட்டும்தான் குத்து விளக்கினைத் தேய்த்தல், சுத்தப்படுத்தும் பணியினைச் செய்ய வேண்டும்.

திங்கள் நடு இரவு முதல் புதன் நடு இரவு வரை குபேர தன தாட்சாயணியும், குககுரு தன தாட்சாயணியும் குத்து விளக்கில் பூரணமாகக் குடியிருப்பதால் இந்த நாள்களில் விளக்கினை தேய்த்து அலம்புவதால் இந்தச் சக்திகள் விலகிப் போகும் என நம்புகின்றனர்.



வெள்ளியன்று அலம்புவதால் அதில் குடியிருக்கும் குபேர சங்க நிதியட்சிணி விலகிப் போய் விடுவாள்.

விளக்கை முதலில் நீரால் அலம்பி பின்பு எண்ணெய்ப் பிசுக்கு நீங்கும் வண்ணம் தேங்காய் நார் கொண்டு பச்சைப்பயறு, வெந்தயம், பச்சரிசி, எலுமிச்சைத் தோல் சேர்த்து அரைத்த சிகைக்காய்ப் பொடி போட்டுத் தேய்க்க வேண்டும்.

கடைசியில் எலுமிச்சைச்சாறு ஊற்றி சுத்தப்படுத்தித் தண்ணீர் ஊற்றி நன்கு சுத்தப்படுத்த வேண்டும்.

ஞாயிறன்று தீபம் போடுவதால் கண் சம்பந்தமான நோய்கள் தீரும். மனம் நிலைப்பட திங்கள் அன்று தீபம் போட வேண்டும்.

'குரு பார்வை' இருந்தாலும் கடினமான வேலைகளையும் கூட எந்தவிதப்



பிரச்சினையுமில்லாமல் எளிதாகச் செய்ய முடியுமே! வியாழன் அன்று தீபமேற்றினால் 'குருவின் பார்வையும் - அது தரும் கோடி நன்மையும்' நமக்கே கிடைக்கும்.

வாகன விபத்துக்களைத் தவிர்க்க உதவுவதுதான் சனியன்று நாம் போடும் தீபம்.

விளக்குத் தேய்க்கக் கூடாத நாள்களில் விசேஷமான நோன்பு, பூஜைகள் வந்தால், விளக்கை நீரில் அலம்பி துடைத்து விபூதி கொண்டு தேய்த்துச் சுத்தமான துணியினால் விளக்கைத் துடைத்து தீபம் ஏற்றலாம்.

விளக்கில்லாத கோயிலில் ஏதாவது ஒரு திசையில் பஞ்சுத் திரி போட்டுத் தீபம் ஏற்றினால் சூரிய பகவானின் பூரண அருள் கிடைக்கும். இது ஞாயிற்றுக்கிழமைகளில் செய்யப்பட வேண்டிய ஒன்று.

தாமரை நூல் தீபம், மனதுக்குப் பிடித்த துணையுடன் இணைத்து வைக்கும்.

வாழைத் தண்டின் நூலில் திரி செய்து தீபம் ஏற்றுவது மக்கட் பேற்றைத் தரும். வெள்ளெருக்குப் பட்டையில் திரித்துத் தீபம் ஏற்றுவது காற்று சேட்டையை விலகச் செய்யும்.

பஞ்சமி திதியில் விளக்கேற்றுவது அகால மரணத்தை தவிர்க்கும். புதிதாக நெய்த பருத்தி ஆடையில் அரைத்த சந்தனம், பன்னீர் சேர்த்துத் தடவிக் காய வைத்து, அதைத் திரியாக்கி வடக்கு முகமாக வைத்து, 'பஞ்ச தீப' எண்ணெய் ஊற்றித் திருவாதிரை நட்சத்திரத்தன்று தொடர்ந்து ஓராண்டு விளக்கேற்ற நோய்களின் வேகம் குறையும். பல காலமாக வராமலிருந்த பணம் தேடி வரும். இது அருந்ததிக்குச் சாவித்திரி தேவி அருளிய வாக்கு.


# வேண்டும் வரம் தரும் மலைக்கோயில் மாதா

தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு மனப்பூர்வமான ஆசீர்வாதத்தையும், மட்டற்ற மகிழ்ச்சியையும் தரும் ஆலயமாக அமைந்துள்ளது மலைக்கோயில் மாதா தேவாலயம்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மறை மாவட்டத்தை சேர்ந்த மரம் என்னும் பங்கீன்கீழ் உள்ள இந்த தேவாலயம் 1913ம் ஆண்டு கட்டப்பட்டது. 400 அடி உயரமுள்ள மலைமீது இந்த ஆலயம் அமைந்துள்ளது.

அதிசய நீரூற்று : தேவாலயத்தை கட்ட ஆரம்பிக்கும்போது கட்டிட வேலைகளுக்காக பாறையை உடைத்தனர். அப்போது அற்புத நீரூற்று ஒன்று தோன்றியது. பீறிட்டு வந்த தண்ணீரை கண்டு எல்லோரும் ஆனந்தம் அடைந்தனர். 400 அடி உயரமுள்ள மலையில், பாறைகளின் நடுவே நீரூற்று தோன்றியது மாதாவின் மகிமைதான் என்று நம்பப்படுகிறது.

எப்போதும் வற்றாமல் இருக்கும் இந்த நீரூற்று பக்தர்களின் தாகம் தணிக்கவும், நோய் தீர்க்கும் அரிய மருந்தாகவும் பயன்பட்டுவருகிறது. தேவாலயம் மலையின்மீது மங்களகரமாக காட்சியளிப்பதால் 'மலைக்கோயில் மாதா' ஆலயம் என்று அழைக்கப்படுகிறது.



தென் மாவட்டங்களிலேயே மிக உயரமான மலைப்பகுதியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் இதுதான். மலையின் அடிவாரத்தில் இருந்து மலை மீதுள்ள மாதா கோயில் வரை இயேசுவின் பாடுகளை உணர்த்தும் 14 சிலுவைப்பாதை நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளது இந்த தேவாலயத்தின் தனிச்சிறப்பாகும்.

மலையின் உச்சியில் கல்வாரி கெபியும், அதன் அருகிலேயே மாதாவின் கெபியும் அமைந்துள்ளது இந்த தேவாலயத்திற்கு மேலும் அழகு சேர்க்கிறது.

அற்புதம் : நம்பிக்கையோடு தன்னிடம் வரும் மக்களின் தீராத தலைவலி, வயிற்றுவலி உள்ளிட்ட நோய்களை தீர்த்து வைப்பதோடு, குழந்தைப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு அந்த பாக்கியத்தையும் வழங்கி வருகிறார் இந்த மலைக்கோயில் மாதா. அத்துடன், சமூக, பொருளாதார இன்னல்களையும், உடல்,உள்ளம், ஆன்மாவில் ஏற்படும் குறைகளையும் போக்கக்கூடிய அற்புத தலமாக விளங்குகிறது இந்த தேவாலயம்.

இங்கு நடைபெறும் ஒவ்வொரு திருவிழா கொண்டாட்டத்தின்போதும் மலை முழுவதும் மின்விளக்கு அலங்காரத்தில் ஜொலிப்பதை பார்ப்பது கண்கொள்ளா காட்சியாக இருக்கும். மேலும், அந்த திருவிழாவின்போது ஆயிரக்கணக்கான மக்கள் குடும்பத்தோடும், உறவினர்களோடும் நண்பர்களோடும் வந்து, அன்னையின் ஆலயம் அமைந்துள்ள மலையிலேயே தங்கி, மாதாவின் அன்பையும், ஆசியையும் பெற்றுச் செல்கிறார்கள்.

அப்போது ஒருபுறம் மலை முழுவதும் ஒளிவெள்ளம் பாய்வதோடு, மறுபுறம் மக்கள் வெள்ளமும் நிரம்பி இருக்க அந்த ரம்மியமான காட்சியை வாழ்நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுவது அற்புதமான ஒன்று.

வெளிமாநில பக்தர்கள் : திருவிழா நாட்கள் தவிர, ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து அன்னையை வணங்கிச் செல்கிறார்கள். திருவிழாக்காலங்களில் தமிழகம் மட்டுமின்றி, புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகம், கேரளா போன்ற அண்டை மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பேர் வந்து செல்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் திருவிழா நடைபெறும்.மலைமீது வீற்றிருந்து அருள்பாலிக்கும் மாதாவின் மகிமையை உணர நாமும் ஒரு முறையாவது இங்கு சென்று வருவோம்.


**Sakthi Murugan Jewellery**




Silver, Gold, Diamond & Birth Stone

New No. 225, (Old No. 116),
Triplicane High Road,
Triplicane, Chennai - 600 005.
(Opp Rathna Cafe)

**Cell : 9840589646**
**Tel : 43568668**

**ரப்பானி வைத்திய சாலா**

**டாக்டர் ஹக்கீம் எஸ்.ஏ.சையத் சத்தார்**



139/65, டாக்டர் பெசன்ட் ரோடு
(மீர்சாகிப்பேட்டை
மார்கெட் அருகில்)
ராயப்பேட்டை,
சென்னை - 600 014.

தொலைபேசி
28476969, 28470874

ஆஸ்துமா, சைனஸ், கர்ப்பப்பை கோளாறுகள், வலிப்பு நோய், வெண்குஷ்டம், உயிர் அணுக்கள் நீர்த்துப் போகுதல், உடல் உறுப்புகள் சிறுத்து போதல், இந்திரியம் போகுதல், விரைவில் இந்திரிய ஒழுக்கு, தாம்பத்ய உறவில் குழப்பம், ஆண்மைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, சோரியாசிஸ், மூட்டுவலி போன்ற தீராத நோய்களுக்கு உடனடி தீர்வு.

(ராஜ் டி.வியில் புதன், சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 9.00 மணி வரை, சனிக்கிழமைகளில் காலை 8.55 முதல் 9.25 மணி வரை) ஜெயா டி.வியில் திங்கள் காலை 10.30 முதல் 11.00 மணிவரை, தமிழன் டி.வியில் தினசரி மாலை 6.00 முதல் 6.30 மணிவரை டாக்டரின் பேட்டியைக் காணத் தவறாதீர்கள்

**ARAVINDH COMMUNICATIONS**

NOKIA Priority DEALER

**FREE TICKETS AT SATYAM CINEMAS**



**Buy an E-Series or N-Series at Aravindh Communication (Nokia Priority Triplicane) and Get Two tickets for a Couple**

Old # 117, New # 227, T.H.Road, Triplicane, Chennai - 5
Ph : 28443353. Email: nokiaanbalagan@yahoo.co.in
**Cell : 9884126688 / 9841035559**

EID - MUBARAK

**ZAAP INTERNET A/C**

- Colour Printout
- Colour Xerox
- Cosmetics
- DTP (Tamil & English)
- Fax, Games
- Scanning
- Spiral Binding
- CD Writing
- Lamination
- Mobiles Sales & Services
- Translation Service Provider

**High Speed**

**INTERNET - Per hour - Rs. 15/-**

**LASER PRINTOUT - Rs.1/- Onwards**

**Xerox - @ 35, 50, 75 Paise Onwards**

No.3, Pillayar Koil Street,
Triplicane, Chennai - 600005
**Ph : 4215 7149,
90436 61928**

## அருள்மிகு எல்லையம்மன் ரேணுகா பரமேஸ்வரி திருக்கோயில் திருப்பணிக்கு உதவுவீர்



அருள்மிகு எல்லையம்மன் கோயிலின் திருப் பணிக்கு ரூபாய் 75,00,000 லட்சம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆகவே பொது மக்களும் ஆன்றோர்களும் நண்பர்களும் மனமுவந்து கோயிலின் திருப்பணிக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

மேலும் பக்தர்கள் கோயிலின் திருப்பணிக்காக நிதி உதவி மட்டுமல்லாமல் கோயிலுக்குத் தேவையான செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் போன்றவற்றையும் தங்களால் இயன்ற அளவு வாங்கித் தரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## இதயங்களை இணைக்கும் இனிய விழா பத்திரிகையாளர்களின் புனித ரமலான் விருந்தோம்பல்

புனித ரமலான் முன்னிட்டு தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் சென்னையில் விருந்தோம்பல் நிகழ்ச்சி எளிமையாகவும் இனிமையாகவும் நிகழ்ந்தது.

சென்னை பிரஸ் கிளப்பில் நடந்த இனிய விழாவிற்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் டி.எஸ்.ரவீந்தரதாஸ் தலைமை ஏற்றார். மூத்த பத்திரிகையாளர் வசீகரன் வரவேற்றார்.

சென்னை மாநகர மேயர் மா.சுப்பிரமணியன், பிரஸ் கிளப் நிர்வாகி பாரதி தமிழன், மாநகராட்சி உறுப்பினர் சுசீலா கோபாலகிருஷ்ணன், கலைஞர் டி.வி. பொதுமேலாளர் பிளாரண்ட் பெரைரா, தொலைக்காட்சி நிகழ்ச்சி இயக்குநர் ரமேஷ்பிரபா, விண்தொலைக்காட்சி நிறுவனர் டாக்டர் டி.தேவநாதன், சமரசம் மாத இதழ் பொறுப்பாசிரியர் சிக்கந்தர், தினபூமி செய்தி ஆசிரியர் புருஷோத்தமன், மணிச்சுடர் செய்தி ஆசிரியர் காயல் மகபூப், காங்கிரஸ் கட்சியின் நிர்வாகி கோபண்ணா, இதயக்குரல் ஆசிரியர் அப்துல்ரஹ்மான் ஆகியோர் நல்லிணக்க உரை ஆற்றினர்.

இறுதியில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தலைவர் கவிக்கோ அப்துல் ரஹ்மான் நிறைவுரையாற்றினார். இறுதியில் மாவட்டத் தலைவர் ஏ.ஜே.சகாயராஜ் நன்றி கூறினார்.








**அஸ்கர் பயிற்சி நிறுவனம்**

நிறுவிய ஆண்டு – 1980
நிர்வாகம் அஸ்கர் கல்வி டிரஸ்ட் – முஸ்லீம் சிறுபான்மை கல்வி நிறுவனம்
102, டாக்டர் பெசன்ட் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 14

+2 STATE BOARD & CBSE

X STD STATE BOARD MATRIC ANGLO INDIAN BOARD & CBSE

X STD + 2 NIOS NATIONAL INSTITUTE OF OPEN SCHOOLING


+2 பாடங்கள்
கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கம்ப்யூட்டர்
வணிகக் கணிதம், வணிகவியல், பொருளியல், கணக்கியல்
10ம் வகுப்பு
அனைத்து பாடங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மீடியம்

Spoken English கற்றுத் தரப்படும்

தொடர்பு கொள்க : 9884326917



**JB**
**பேட்டரி சேல்ஸ் & சர்விஸ்**
Authorised Dealer : EXIDE SF AMARON
இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள் கிடைக்கும்.
மின்சார தடையா? கவலை வேண்டாம்
(புதிய UPS மற்றும் இன்வெர்ட்டர்கள்)
மற்றும் UPS, இன்வெர்ட்டர் பேட்டரிகளும் சேல்ஸ் சர்வீஸ்



300 VA to 5 KV



புது எண் : 11, பழைய எண்.6, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு,
இராயப்பேட்டை, (ஜாம்பஜார் அருகில்) சென்னை – 600014.
(All Master Card Accepted)
செல் : 98408 88051, 97108 80700, 32432230



**C.S.K. MEGA CATERING SERVICES**

*All Function Catering Contractor*



கல்யாண வைபவங்களுக்கும் வீட்டில் நடக்கும் எல்லா சுப நிகழ்ச்சிகளுக்கும் நல்ல தரமான முறையில் அறுசுவை ருசியுடன் சுத்தமான சைவை உணவு செய்து தரப்படும். உரிமையாளர் : C.S. கிருஷ்ணன்



No. 51/6, Venkatachalam Street, Triplicane, Chennai - 5
Res : Old No.10, New No.26, Theetharappan Street, (Rathna Cafe Backside) Pycrofts Road, Triplicane, Chennai - 600 005.
Mobile : 92821 37278, 6537 1644


## சிரிப்போ சிரிப்பு.....

### டாக்டர் வெ. சீதாராமன்

உன் சீப்பு வியாபாரம் என்ன ஆச்சி?
காலை ''வாரி''டிச்சி

''குறுந்தகடு''ன்னா, என்னப்பா?
ஷேவிங் செய்யற ''ப்ளேடோ'' என்னவோ?

நோயாளி : ''இடுப்பு'' வலிக்கு போட்ட மாத்திரைல, 'வயித்து' வலி வந்திடிச்சி டாக்டர்!
டாக்டர் : விடுங்க, பக்க விளைவுன்னா கொஞ்சம் ''முன்னே, பின்னே'' தான் இருக்கும்!

டைரக்டர் : என்னோட புது மாயமந்திர படம் பார்த்திங்களே, படம் எப்படி?
நிருபர் : பாதி படத்திலேயே, தியேட்டர்லயிருந்த எல்லாரும் மாயமா மறைஞ்சி போயிட்டாங்க சார்!

டாக்டர் : உங்களோட இப்போதைய 'கம்ப்ளைன்ட்' என்ன?
நோயாளி : உங்க நர்ஸ் என்னை பார்த்தாலே 'சிடுசிடு'க்கறாங்க டாக்டர்!

நர்ஸ் 1: ஆபரேஷன் ஆன பேஷண்ட் பேசறாரே!
நர்ஸ் 2: 'பேசறார்'னா, இன்னும் டாக்டர் ஆபரேஷன் செய்யலேன்னு அர்த்தம்!

இந்த சமோசா கடைக்காரர் விதவிதமான 'சமோசாக்களை' அருமையா போடுவார்!
நிறைய 'ஸ்டஃப்' உள்ள ஆளுன்னு சொல்லு!

**AJAY MARKETING**
AJAY AQUA PACKAGED DRINKING WATER
*Specialist in Gift Articles*
*H.O : 6/23, Agathimuthan St, (Near Union Bank) Triplicane, Chennai - 5.Ph : 42157327, 55349948 9840900631, 32, 33, 34*
*B.O : 23/2, Vadugu Street, Near Bazar Road, Mylapore, Chennai - 600004. Ph : 98403 77004*
சுத்தமான, சுகாதாரமான, சுவையான குடிநீர் தரம் பலமுறை சுத்திகரிப்பு மற்றும் ஆய்வு பரிசோதனைகளை அடிப்படையாக கொண்டது. BIS ஆல் அங்கீகரிக்கப்பட்டது. உங்கள் தாகம் தணிக்க உங்கள் இல்லம் தேடிவர அணுகுங்கள்!
இலவச டோர் டெலிவரி!!

# ஆதிசங்கரர்



**சி**வபெருமானே மானிட ரூபத்தில் ஜெகத்குரு ஆதி சங்கரராக அவதரித்தார். கேரளாவில் திருச்சூர் அருகே காலடி என்ற கிராமத்தில் கி.பி. 7ம் நூற்றாண்டில் சிவகுரு என்ற நம்பூதிரி வாழ்ந்து வந்தார்.

இவர் அனைத்து வேதங்கள், சாஸ்திரங்களைப் படித்தவர். மகா பண்டிதர் என்பவரின் மகள் ஆர்யாம்பாளை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு நீண்டகாலமாகக் குழந்தை பிறக்கவில்லை. எனவே, திருச்சூரிலுள்ள சிவாலயத்தில் அருள்பாலிக்கும் வடக்குநாதரிடம், குழந்தை வரம் கேட்டு தவமிருந்தனர்.

ஒருசமயம் சிவன், சிவகுருவின் கனவில் தோன்றி, 'எதற்காக தவம் இருக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

சிவகுரு, தங்களுக்குக் குழந்தை இல்லாததால் புத்திரப் பேறு வேண்டிய தவமிருப்பதாக பதிலளித்தார்.

உடனே சிவன் அவரிடம், 'உனக்கு நீண்ட ஆயுள் உள்ள, மோசமான குணங்களை உடைய ஏராளமான புத்திரர்கள் பிறக்க வாய்ப்பிருக்கிறது. அதுபோன்ற குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறாயா?' என்றார்.

வருத்தமடைந்த சிவகுரு சிவபெருமானிடம், "அப்படிப்பட்ட குழந்தைகள் பிறப்பதைவிட நற்குணம் வாய்ந்த ஒரே ஒரு மகன் மட்டும் பிறந்தால் போதும்" என்றார்.

உடனே சிவன், "எல்லா நற்குணங்களும், அறிவும் உள்ள ஒரு மகன் வேண்டுமானால் அவன் குறைந்தநாள் தான் இந்தப் பூமியில் வாழ்வான். இதற்குச் சம்மதமா?" எனக்கேட்டார்.

சிவனின் இந்த நிபந்தனையை ஏற்ற சிவகுரு, "அறிவுள்ள ஒரு மகனே எனக்குப் பிறந்தால் போதும்" என்றார்.

அதன்படி வைகாசி மாதம், சுத்த பஞ்சமியன்று சூரியன், செவ்வாய், குரு, சனி ஆகிய கிரகங்கள் உச்சத்தில் இருக்கும் சுப நேரத்தில் ஆதிசங்கரர் இந்த உலகத்தில் அவதரித்தார். சிவகுருவும், அவரது மனைவியும் மகிழ்ந்தனர். ஆதிசங்கரருக்கு, இரண்டு வயதானபோதே எழுத்துக்களை வாசிக்கத் தொடங்கிவிட்டார்.

அவரது மூன்றாம் வயதில், தந்தை சிவகுரு காலமானார். ஆர்யாம்பாள் மிகுந்த சிரமத்துடன் ஆதிசங்கரரை வளர்த்து வந்தார்.

ஒரு குருவிடம் வேதம், சாஸ்திரம் படிக்க அனுப்பினார். அங்கு ஐந்து வயதிற்குள்ளாகவே ஆதிசங்கரர் எல்லா சாஸ்திரங்களையும் படித்து வல்லவரானார். படிக்கும் காலத்தில் உஞ்சவிருத்தி (பிச்சை) எடுத்து வந்து, குருவுக்குக் கொடுத்துவிட்டு, தானும் உண்பது ஆதிசங்கரரின் வழக்கம்.

ஒருநாள் ஓர் ஏழைப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று, ஏதாவது பிச்சை தரும்படிக் கேட்டார். அந்தப் பெண்ணிடம் கொடுப்பதற்கு ஏதுமில்லாததால் வீட்டில் இருந்த உலர்ந்து போன ஒரு நெல்லிக்கனியை ஆதிசங்கரிடம் கொடுத்தார்.

ஏழையாக இருந்தாலும், தன்னிடமிருக்கும் ஏதாவது ஒன்றை, தர்மமாக அளிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட அந்த மாதரசியை ஆதிசங்கரர் பாடினார்.

அவளது வீட்டு வாசலில் நின்று, லட்சுமிதேவியைப் பற்றி 'கனகதாரா ஸ்தோத்திரம்' பாடினார். அப்போது அவளது வீட்டில் தங்க நெல்லிக்கனிகள் நிறைந்தன.

இப்படியாக ஆதிசங்கரர் சிறுவயதிலேயே பல அற்புதங்களை நிகழ்த்தினார்.

ஒரு சமயம் அவரது தாய், அருகிலிருந்த பூர்ணா நதிக்கு நீராடச் சென்றபோது, வெயில் தாளாமல் மயக்கமடைந்து விழுந்துவிட்டார்.

இதையறிந்த சங்கரர், நதி தூரத்தில் இருப்பதால் தானே சிரமம் ஏற்பட்டது என எண்ணி, அந்த நதியை வணங்கித் தன் வீட்டின் அருகிலேயே ஓட வேண்டுமென வேண்டினார்.

அதன்படியே, பூர்ணாநதியும் சங்கரின் வீட்டிற்குப் பக்கத்திலேயே ஓடத் துவங்கியது.

மகன் மீது அதீத பாசம் கொண்டிருந்த ஆர்யாம்பாள், சிவன் கொடுத்த வரத்தின்படி ஆதிசங்கரர் 16 ஆண்டுகள்தான் உலகில் இருப்பார் என்பதை நினைத்து வருந்தினார். அவரிடம் சங்கரர் ஆறுதல் கூறி தான் துறவியாகச் செல்லப் போவதாகக் கூறினார். ஆனால், ஆர்யாம்பாள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவரும் வற்புறுத்தாமல் விட்டு விட்டார்.

ஒருசமயம், தன் தாயுடன் பூர்ணாநதிக்குச் சென்றார் சங்கரர். நதியில் அவர், குளித்துக் கொண்டிருந்தபோது, ஒரு முதலை அவரது காலைக் கௌவ்வியது. தன் கண்முன்னேயே மகனை முதலைப் பிடிப்பதைக் கண்ட ஆர்யாம்பாள் பதறித் துடித்தார்.

உடனே சங்கரர், "நான் துறவியாக மாற நீ சம்மதித்தால் இந்த முதலை இப்போதே என் காலை விட்டுவிடும்" என்றார்.

மகனைக் காப்பாற்ற வேறு வழி தெரியாத, ஆர்யாம்பாளும் சம்மதித்தார். உடனே முதலை சங்கரரின் காலை விட்டது.

அதன்பிறகு சங்கரர் துறவியாகச் சென்றார்.

காசிக்குச் சென்று சிலகாலம் தங்கியிருந்தார். ஒருமுறை கங்கைக்கு தன் சீடர்களுடன் நீராடச் சென்றார். அப்போது 4 நாய்கள் பின்தொடர ஒருவன் சங்கரர் 'விலகிப் போய்விடு' என்றார்.

வந்தவனோ, 'விலகிப் போகச் சொல்வது இந்தச் சரீரத்தையா அல்லது அதன் உள்ளிருக்கும் சக்தியையா' என்று கேட்டான். உடனே சங்கரர் வந்தவர் சாதாரண ஆள் அல்ல என்பதை தெரிந்து கொண்டு 'மனீஷாபஞ்சகம்' என்ற ஐந்து ஸ்லோகங்கள் சொன்னார்.

அதைக் கேட்ட மனிதன் ஜடை, மகுடம், சந்திரன் ஆகியவை அணிந்த காசி விஸ்வநாதராக சங்கரருக்கு காட்சி கொடுத்தார். அப்போது, தனது ஆயுள்காலம் முடிந்து விட்டது என்பதைத் அறிந்த சங்கரர் கங்கையின் தன் உடலை தியாகம் செய்யச் சென்றார்.

வியாசர் அவரைத் தடுத்து, 'உலக நன்மைக்காக இந்தப் பூமியில் இன்னும் 16 ஆண்டுகள் நீ வாழ்வாய், இந்தப் பூமியில் நீ செய்ய வேண்டிய நற்பணிகள் ஏராளமாக உள்ளன" என வரம் கொடுத்து மறைந்தார்.

அதன் பின்பு சங்கரர் தனது இறைப்பணியைத் தொடர்ந்தார்.

ஒரு சமயம் மூகாம்பிகை கோயிலில் இறந்துபோன தன் மகனின் சடலத்தை மடியில் வைத்துக் கொண்டிருந்த பிராமண தம்பதிகளைக் கண்டு மனமுருகிய சங்கரர், கடவுளைப் பிரார்த்தித்து அவனை எழுப்பினார்.

பின்பு மூகாம்பிகையின் கோயிலுக்குள் சென்று ஆனந்த கண்ணீர் பெருக்கி மக்கள் நோயற்ற வாழ்வு வாழ அருளும்படி வேண்டிக் கொண்டார். தனது அவதார நோக்கம் பூர்த்தியாகிவிட்டதை உணர்ந்த சங்கரர் 32ம் வயதில், உடலைத் தியாகம் செய்ய எண்ணினார்.

அப்போது தேவர்கள் வந்து அவரை வணங்கினர். சிவனின் வாகனமாகிய காளையும் வந்து சேர்ந்தது.

பின்பு சங்கரரே ஜடாமுடியும், கங்கையும் தரித்த சிவபெருமான் உருவத்தில் மாறி காளையில் அமர்ந்து கைலாயம் சென்றார்.

இமயமலையில் உள்ள கேதார்நாத்தில் சங்கரர் மறைந்த இடத்தில் 'ஸ்ரீசங்கராச்சாரி கைவல்யதானம்' என்ற பெயரில் கோயில் கட்டப்பட்டுள்ளது.

ஆதிசங்கரர் தெய்வப்பிறவிகளில் உயர்ந்தவராகி, இன்றும் மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

MP Batteries
Old No.29, (New No.16), Subadral Street, Triplicane, Chennai - 600 005.
(Opp. Star Theatre & Near Thiruveeteswaran Koil)
Tel : 044-4266 4630, Cell : 93813 30160, 98408 12930, 93823 30160



XENON ALWAYS ON
DEALERS :
EXIDE | AMARON | TATA
SALES & SERVICES :
BATTERIES, UPS, INVERTORS, ELECTRICAL WORKS
Credit Card Accepted



VINAYAKA TRAVELS




Approved by IRCTC
E-Ticketing, Train, Flight, Bus, Tour Packages
& Mobile Recharge




9840880490, 9382280490, 42075989



VETRI REAL ESTATE
R.Poornachandran



PLOTS, FLATS, BUILDING & SHOPS
BUYING, SELLING & RENTAL
ALL Type of Loans Arranged



9840880490, 9962639178
146/289, Triplicane High Road, Triplicane, Chennai-5.
(opp.Union Bank of India)
Email : chandran1975@gmail.com


# ராசி பலன் - அக்டோபர் 2009

**மேஷம் :**

கோபம், டென்ஷனை குறைத்துப் பொறுமையோடு செயல் பட வேண்டிய நாள். நண்பர்கள் சிலரின் ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்க லாம். நீங்கள் ஏளனமாக நினைத்த ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய லாம். மாமன், மைத்துனர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர்.

**ரிஷபம் :**

ஆதாயமில்லாத அலைச் சல்களுக்கு ஆட்படலாம். உறவினர் ஒருவருக்கு ஜாமீன் கொடுக்க நேரிடலாம். பணவரவு ஒன்றை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரி களின் பாராட்டுக்களை அல்லது விமர்சனங்களைச் சந்திக்கலாம். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் இருக்க வேண்டும்.

**மிதுனம் :**

பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கும். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். முன்பின் தெரியாத ஒருவர் உங்களுக்கு உதவி செய்யலாம். குடும்பப் பெரியவர் களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். நண்பர்களுடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். நினைத்த காரியங்கள் நினைத்தது போல நிறைவேறும்.

**கடகம் :**

உறவினர்கள் சிலரால் அனுகூலமான உதவிகளைப் பெற லாம். சக ஊழியர் ஒருவர் மூலம் உங்களின் சில வேலைகள் முடியலாம். பண ஆதாயங்களைப் பெற வாய்ப்பு உண்டு. அரசு தொடர்பான காரியங் கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரலாம். இளைய உடன் பிறப்புக் களால் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம்.

**சிம்மம் :**

பல நாள்களாக மனதுக் குள் வைத்திருந்த விஷயம் ஒன்றை நண்பர் ஒருவரிடம் சொல்வீர்கள். குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிந்த சிலர் உங்களுக்கு அறிமுகமாகலாம். ஒரு காலத்தில் உங்களைக் காலை வாரி விட்ட ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம். ஆலய வழிபாடுகளால் மனதில் நிம்மதி சந்தோஷம் குடிகொள்ளும். வயிறு உபாதை ஏற்படலாம்.

**கன்னி :**

மற்றவர்கள் எளிதாக நினைக்கும் வேலை ஒன்று, உங்களுக்கு பிரச்சினையாக அமைந்து விடலாம். கடன் பாக்கி ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. குடும்பத்தினர் சிலர் கேட்ட பொருட்களை வாங்கிக் கொடுக்க முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆட்படலாம்.

**துலாம் :**

நல்லவர் ஒருவரின் உதவி கிடைக்கும். வரவேண்டிய பணவரவு ஒன்றை கேட்டு வாங்குவீர்கள். வியாபாரிகளுக்குக் கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். நோய் உபாதைகள் நீங்கி தெம்புடன் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். தொழில் ரீதியாகச் சில மாற்றங் களைச் சந்திக்கலாம். திறமை வெளிப்படும்.

**விருச்சிகம் :**

போட்டி, எதிர்ப்புகளை முறியடிக்கும் நாள். புதிய பொறுப்பு களை ஏற்றுச் செய்ய நேரிடலாம். தொழில் ரீதியான சில வேலைகளில் மாற்றங்களைச் செய்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவுகளைச் செய்யலாம். வரவேண்டிய பணவரவு ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள். ஆலய வழிபாடுகளின் மூலம் அமைதி பெறுவீர்கள்.

**தனுசு :**

நீங்கள் செல்லும் இடத்திற்கு நீங்கள் சற்றும் எதிர் பாராத ஒருவர் வரலாம். உத்தியோ கஸ்தர்கள் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். உறவினர் கள் சிலரை அவர்களுக்குத் தெரியா மல் விமர்சனம் செய்வீர்கள். வெளி யூரில் இருக்கும் ஒருவருடன் பேச முற்பட்டு அவர்கள் கிடைக் காமல் போகலாம். மனக் குறைகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம் :**

தாய் வழி உறவுகள் மூலம் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை நீங்கள் மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள். வாகன பயணங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். போலீஸ் தொடர்பான விஷயங்களில் எச்சரிக்கை அவசியம். யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம்.

**கும்பம் :**

வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைக்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். உங்களுக்கு எதிராக சூழ்ச்சி செய்யும் சிலரைப் பற்றி அறிந்து கொள்வீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்கலாம். வெற்றிகரமான நாள்.

**மீனம் :**

நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தப்படுவீர்கள். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். நீண்டநாள்களாகத் தள்ளி வைத்த வேலை ஒன்றை இன்று செய்ய நேரிடலாம்.

பல நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர்கள் வரலாம். எந்த வேலையும் நேரத்திற்கு முடியாமல் இழுத்தடிக்கலாம். கனவுகள் பலிக்கும் நாள்.


SAI GANEESH
Dealers in :
Switch Board
Lamination Sheets
Cell : 9962475918
Old No. 73, New No. 20,
Pillaiyar Koil Street, Triplicane,
Chennai - 600005.



ZARA PEST CONTROL
Termite Control, General Disinfistitation Service, Mosquito Control, Rat and Roadant Control, Wood Borer Treatment & Garden Pest Control
A.G.A.ABDUL RAHMAAN - 93811 43749
Building No. 62/A, Shop NO.43, Manickam Mansion Complex (Near BSNL office) Thayar Sahib Street, Mount Road, Chennai - 600002.
E-mail : zarapestcontrol@rediffmail.com



Arranged loan for purchase of Vacant land, Home, constraction and Mortgage.
Interest Rate : 10.5% to 16%
No.33/4 & 5, Jaiz Complex, 1st Floor, Triplicane High Road, (opp. to Big Mosque), Chennai - 600005.
Ph : 044 - 28520056
Cell : 9382121639
email : mrajaestate@yahoo.com



Air Cool Service



Specialist in:
Air Conditioner, Washing Machine, Refrigeration and Microwoven
Sales & Service
New # 55, Old # 25, Cella Pillaiyar Koil Street, Royapetta, Chennai - 600 014.
N.M. Ragu
Cell : 9840077725, Off : 4356 7621

# திருமணம் ஒரு விளக்கம் :

**- அன்பு பொன்னோவியம் -**



திருமணம், கல்யாணம் அல்லது கலியாணம் என்ற சொற்கள் வழக்கில் இருக்கும் சொற்களாகும். இந்த சொற்களுடன் திரு என்ற அடைமொழியைச் சேர்த்து திருமணம் திருக்கல்யாணம் என்றும் சிறப்பிப்பார்கள்.

மனம் என்ற சொல்லுக்கு சேர்தல் என்ற ஒரு பொருளை புறநானூற்றுப் பாடல் ஒன்றால் அறிய முடிகிறது. மனத்தல் என்பதற்குப் பொருந்துதல் கலத்தல் என்ற பொருளை குறுந்தொகையால் தெரியவருகிறது. மனம் என்னும் சொல் தமிழில் மூக்கால் உணரும் நறுநாற்றத்திற்கும், ஆண் பெண் இருபாலர் கல்யாணத்திற்கும் வழங்கப்படும் என்று அறிஞர் ஒருவர் கூறுகிறார். எனவே, இதனை மங்கல நாள் என்று கூறுவது பொருத்தமானதாகும்.

கல்யாணம், கலியாண மகளிர், கலியாண வாழ்த்து என்ற சொல்லாட்சிகள் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலை போன்ற காவியங்களிலும் காணப் பெறுவதாகும்.

கலி+ஆணம் = கலியாணம் என்ற இந்த சொல் சாதாரண சாமான்யமான எளிய மக்களிடையே பழக்கத்திலிருக்கும் சொல்லாகும். 'கலி' என்பதற்கும் மகிழ்ச்சி, எழுச்சி, விழா, வலி என்ற பொருளையும் - ஆணம் என்பதற்கு நேயம், பற்றுக்கோடு அல்லது ஊன்றுகோல் என்றும் அகராதி கூறுவதை ஏற்றுக் கொண்டால் கலியாணம் என்ற சொல்லுக்கு பொருள் பொதிந்த விளக்கத்தைக் காணலாம்.

மங்கல நாளாக மதிக்கப்படும் இந்த இருவர் இணையும் நாளை, விழாவாக பெருமகிழ்ச்சி நாளாகவே கொண்டாடுகிறார்கள். அன்று நெருங்கிய உறவினரும், தூரத்து உறவினரும், நெடுநாளைய நண்பர்களும் அண்மைக்கால நண்பர்களும், தெரிந்தவர்களும் ஊரிலுள்ளோர்களும் ஓரிடத்தில் கூடி, மகிழவும் வாழ்த்தவும் பரிசுகள் வழங்கவும் செய்கிறார்கள். இத்திருமண நிகழ்ச்சிகளை தமிழ் இலக்கியங்கள் மூலமாக அறிகிறோம். அவை :

மகளிரும் மைந்தரும் ஒருவரை ஒருவர் விரும்பிக் காதலித்து கிழவன் கிழத்தியாதலே பண்டைநாள் மன்றல் - பிறரறியாவகை சில நாட்கள் கரந்தொழுகும் காதலொழுக்கம் களவெனவும், பலரறிய மணந்து கிழவன் கிழத்தியராய் இல்லத்திருந்து நல்லறம் நடத்தும் ஒழுக்கம் கற்பெனப்படும். அக்கால மன்றல் புரோகிதர் இன்றி தமி எனப்பட்ட சோதிடர் கலியாணத்துக்கேற்ற நல்லநாளை ஆராய்ந்து கூறுவார்.

திருமணம் சமுதாய வளர்ச்சியின் சிறந்த பங்கு. இதில் பெரும்பாலும் சாதி, சமய, வேற்றுமை இருந்ததாகச் சங்க நூல்களால் அறியப்படவில்லை.

திருமணம் செய்வதற்குச் சிலர் முப்பத்திரண்டு வகை பொருத்தங்களைப் பார்ப்பார்கள். தொல்காப்பியர் காலத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் பத்து பொருத்தங்களைப் பார்த்தனர். பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, வயது, உருவு, அன்பு, நிரை, அருள், அறிவு, செல்வம் என்றும் பத்துவகைப் பண்புகள் ஒத்தவராக தலைமக்கள் இருத்தல் வேண்டும் என்று தொல்காப்பியர் வலியுறுத்தும் மரபாகும்.

மணமுறை நாட்டுக்கு நாடு காலந்தோறும் வேறுபடலாம். மணமுறையைக் கொண்டே ஒரு நாட்டினர் நாகரிகம் களிப்பப்பெறுகிறதெனலாம். களவு வழி கற்பில் ஒழுகும் நாகரிகமே நனி சிறந்ததென உலக நாகரிகம் ஒப்புகிறது. தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் களவு மணமாம் காதல் மணமே வழக்காற்றிலிருந்தது.

களவு வாழ்க்கை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே வாழ்க்கையில் பரவலாகப் பின்பற்றப்பட்டு அது இலக்கியங்களில் பயிலலாயிற்று. அதில் ஓரிரு குற்றங்களைக் காணும் மக்கட் சமுதாயம் அதற்குத் தடை விதிக்கலாயிற்று.

அக்கால திருமணம் அனைத்தும் காதல் திருமணமே என்று மயங்க மேற்படும். ஆனால், அது பொருந்தாது. பெற்றோர்களே முயன்று முடித்துவைக்கும் திருமணமே அன்று பெருவழக்காக இருந்திருக்க வேண்டும்.

காதலுக்குத் தடையிருந்ததையும், சமுதாயத்தில் எதிர்ப்பு இருந்ததையும் அறிகிறோம். எனவே, ஒத்த குலத்தார் தம் தம் தகுதி நோக்கி உரிய இடத்தில் மணம் பேசி முடிப்பதே அன்றைய நடைமுறை வழக்கம் என்றும், காதல் சிறுவழக்கம் என்பதனையும் அறியலாம்.

சமுதாயத்தில் பெண்கள் மிகவும் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர். சங்க காலத்திற்குப் பின்னரே அவர்கள் சிறப்புக் குறையத் தொடங்கியது என்பார்கள்.

- "உணவில் ஒளிந்திருக்கும் சாதி" நூலிலிருந்து

**KING REAL ESTATE**
கிங் ரியல் எஸ்டேட்
K. விஜயன், Cell : 9941472675
வீடு வாங்க, விற்க அணுகவும்
NO.25/13, தானப்ப செட்டி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5
எம்ப்ராய்டரிங் சிறந்த முறையில் செய்து தரப்படும்

**துரைப்பாண்டியன்**
**சமையல்**
**கான்ட்ராக்ட் குக்**
பு.எண்.8, (ப.எண்.13),
பொன்னப்பத் தெரு,
திருவல்லிக்கேணி,சென்னை - 5.
**செல் : 98404 43002**

**தாய்**
**ரியல் எஸ்டேட்**
**வீடுகள் வாங்க, விற்க**
**வாடகைக்கு அணுகவும்**
எண் : 161/319, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, எல்லை அம்மன் கோயில்
முன்புறம், ஐஸ்அவுஸ், சென்னை-5
**B.S.VASAN-9941172464**
**9841128212,43588555**
**S.SIVA - 9840075383**

**TRIPLICANE NEWS**
கௌரவ ஆலோசகர்கள்:
T.T. முனுசாமி,
G. மோகனகிருஷ்ணன்,B.A.B.L.,
(செயலாளர்-சென்னை உயர்நீதிமன்றம்)
B. குமார்,M.A.B.L.,
D. கண்ணன்,M.L.,
S. கேசவன்,B.A.B.L.,
E. ராமண்ணா,M.A.B.L.,
T. தேவேந்திரன்,M.A.B.L.,
R.அப்துல் முபீன்,B.A.B.L.,
S. ராஜ்குமார்,B.A.B.L.,
வெண்ணிலா ராஜ்குமார்,
மேலாளர்:C.முகமதுசுலைமான்
தலைமை நிருபர் :
ம.வெங்கடேசன்,M.A.

***TRIPLICANE NEWS :***
நிர்வாக அலுவலக முகவரி :
எண்.ப.எண். 14, புதிய எண்.43,
மல்லன் பொன்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
செல் : 94443 18719, 9940627772.
E-mail :
triplicanenews@yahoo.com

## வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அன்பார்ந்த வாசகர்களே!

தங்கள் பகுதியில் நடக்கும் விழாக்கள், சமுதாய நிகழ்ச்சிகள், ஆன்மிக நிகழ்ச்சிகள் போன்றவற்றை போட்டோவுடன் டிரிப்ளிகேன் நியூஸ் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கவும். தாங்களும் கதை, கவிதை, கட்டுரை எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**

TVS
**WISH YOU HAPPY DEEPAVALI**
**SRI VIGNESH MOTORS**
**Tvs Authorised Service Centre**
**Automated Work Shop**
SALES, SERVICE & EXCHANGE OFFER


#3, Kuppumuthu Street, Ellise Road, Triplicane, Chennai-600005
**Ph : 4266 3525, 42155516 Cell : 9841251516**




# ரவி ஸ்வீட்ஸ்

(ஜாம்பஜார் – ஐஸ்ஹவுஸ்)



பண்டிகை கால ஸ்வீட் ஆர்டர்கள் வரவேற்கப்படுகின்றன



100க்கும் மேற்பட்ட இனிப்பு வகைகள்




நிறைவான தரத்தில்! நியாயமான விலையில்!

எங்களிடம் கிடைக்கும்.




அன்புடன் வரவேற்கும்

ரவி ஸ்வீட்



**Our New Branch:-**

## ரவி ஸ்வீட்ஸ்

எண்.62/48, எல்லீஸ் ரோடு, சென்னை–2

செல் : 9841814483, 9841814484



தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# VISHALAM BUILDERS

**Office : 32, Pillaiyar Koil Street, Triplicane, Chennai - 600 005.**

**Ph : 2852 9413, 28420938 Cell : 9962607150, Contact Time : 11.00am to 6.00 pm**

## FLATS FOR SALE

**No.3/10, Krishnappa Street, Chepauk (near O.V.M. Street) Chennai - 600005**

- நீடித்து உழைக்க தரமான பொருட்களை கொண்டு சிறந்த Engineer மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- குடிநீர் தட்டுப்பாடு இல்லாமலும் காற்று வெளிச்சம் உள்ளவாறும் நடுத்தர மக்களுக்காக உயர்தரமாக கட்டப்பட்டுள்ளது.
- சுலபமாக மாடி ஏறுவதற்கும் வசதியாக அகலமான படிக்கட்டுக்கள், Two Wheeler Parking மற்றும் Lift வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.
- Flat Availability குறைவாக உள்ளதால் உடனே புக்கிங் செய்யவும்
- Flat for available



Owned, Published and Printed by A. Bakyaraj. Published from No.7, Ramasamy Maistry Street, Triplicane, Chennai - 5.
and Printed at Wonder Prints, 14, Weavers Street, Triplicane, Chennai - 5. Editor : A.BHAGYARAJ